### 7 மாநிலங்களில் இடைத்தேர்தல்:

# பா.ஜ.க.வுக்கு பெரும் பின்னடைவு!

## 13 தொகுதிகளில், ‘இந்தியா’ கூட்டணி 11 தொகுதிகளை கைப்பற்றியது!

சென்னை, ஜூலை 14-

தமிழ்நாடு, மேற்குவங்கம் உள்ளிட்ட 7 மாநிலங்களில் 13 சட்டமன்றத் தொகுதிகளுக்கான வாக்கு எண்ணிக்கையில் 11 தொகுதிகளில் இந்தியா கூட்டணிக் கட்சிகள் முன்னிலை பெற்றுள்ளன.

அண்மையில் நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் கருத்துக்கணிப்புகளை எல்லாம் பொய்யாக்கும் வகையில் அதிக பட்ச இடங்களில் இந்தியா கூட்டணி வெற்றி பெற்றது.

இந்நிலையில், கடந்த 10ம் தேதி தமிழ்நாட்டில் விக்கிரவாண்டி, மேற்குவங்கத்தில் உள்ள ராய்கஞ்ச், ரனாகாட் தக்சின், பாக்தா மற்றும் மணிக்தலா ஆகிய 4 தொகுதிகள், மத்தியப் பிரதேசத்தில் அமர்வாரா, பீகாரில் ரூபாலி, உத்தரகாண்டில் உள்ள பத்ரிநாத் மற்றும் மங்களூர், பஞ்சாப்பில் ஜலந்தர் மேற்கு, இமாச்சலப் பிரதேசத்தில் டேஹ்ரா, ஹமிர்பூர் மற்றும் நலகர் ஆகிய 13 தொகுதிகளில் இடைத்தேர்தல் நடைபெற்றது. இந்த தொகுதிகளில் பதிவான வாக்குகள் எண்ணும் பணிகள் நேற்று காலை 8 மணிக்கு தொடங்கி நடைபெற்று வருகின்றன. மேற்குவங்கத்தில் ஏற்கனவே பா.ஜ.க.வசம் இருந்த ராய்கஞ்ச், ரனாகாட் தக்சின் ஆகிய 2 தொகுதிகள் உள்ளிட்ட 4 தொகுதிகளிலும் திரிணாமுல் காங்கிரஸ் முன்னிலை பெற்றுள்ளது. இமாச்சலப் பிரதேசத்தில் 3 தொகுதிகளிலும் காங்கிரஸ் முன்னிலை பெற்றுள்ளது. உத்தரகாண்ட் மாநிலத்தில் ஒரு தொகுதியில் பா.ஜ.க.வும், ஒரு தொகுதியில் காங்கிரசும் முன்னிலை பெற்றுள்ளன.

பஞ்சாப் மாநிலம் ஜலந்தர் மேற்கு தொகுதியில் ஆம் ஆத்மி வேட்பாளர் மொஹிந்தர் பகத் வெற்றி பெற்றுள்ளார். பீகாரில் உள்ள ஒரு தொகுதியில் ஐக்கிய ஜனதா தளமும், மத்தியப் பிரதேசத்தில் உள்ள ஒரு தொகுதியில் காங்கிரஸ் முன்னிலை பெற்றுள்ளன. தமிழ்நாட்டில் விக்கிரவாண்டி தொகுதியில் தி.மு.க. முன்னிலை பெற்றுள்ளது.

மேற்குவங்கத்தில், ஏற்கனவே பா.ஜ.க.வசம் இருந்த ராய்கஞ்ச், ரனாகாட் தக்சின் ஆகிய 2 தொகுதிகள் உள்ளிட்ட 4 தொகுதிகளிலும் திரிணாமுல் காங்கிரஸ் முன்னிலை பெற்றிருந்தது.

இமாச்சலப் பிரதேசத்தில் 3 தொகுதிகளிலும் காங்கிரஸ் முன்னிலை பெற்றுள்ளது.

உத்தரகாண்டில் ஒரு தொகுதியில் பா.ஜ.க.வும், ஒரு தொகுதியில் காங்கிரசும் முன்னிலை பெற்றுள்ளன பஞ்சாப், ஜலந்தர் மேற்கு தொகுதியில் ஆம் ஆத்மி வேட்பாளர் மொஹிந்தர் பகத் வெற்றி பெற்றுள்ளார்

பீகாரில் உள்ள ஒரு தொகுதியில் ஐக்கிய ஜனதா தளமும், மத்தியப் பிரதேசத்தில் உள்ள ஒரு தொகுதியில் காங்கிரசும் முன்னிலை தமிழ்நாட்டில் விக்கிரவாண்டி தொகுதியில் மகத்தான வெற்றி பெற்றுள்ளது.

# முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிக்கை!... முதல் பக்கத் தொடர்ச்சி

வேட்பாளர் அன்னியூர் சிவாவை வெற்றி பெற வைக்க பொறுப்பேற்றுக் கொண்ட கழக துணைப் பொதுச்செயலாளர் அமைச்சர் க.பொன்முடி - கழகக் கொள்கை பரப்புச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.ஜெகத்ரட்சகன் ஆகியோர் தலைமையில் அமைச்சர் பெருமக்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள் உள்ளிட்ட அனைவரும் களம் கண்டார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த கழக நிர்வாகிகள் என பலரும் களப்பணி ஆற்றினார்கள்.

**கண்துஞ்சாது உழைத்த - கழகத்தினருக்கு நன்றி!**

பொதுச்செயலாளர் அண்ணன் துரைமுருகன், இளைஞரணிச் செயலாளர் தம்பி உதயநிதி உள்ளிட்ட முன்னணியினர் பலரும் தேர்தல் பரப்புரை செய்தார்கள். நமது இந்தியா கூட்டணிக் கட்சித் தலைவர்கள், தொடர்ந்து பரப்புரையில் ஈடுபட்டார்கள். இந்தியா கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கும் - உடன்பிறப்புகளும் தோழமைக் கட்சித் தோழர்களும், உதயசூரியனின் வெற்றிக்கு இரவு பகல் பாராது கண்துஞ்சாது உழைத்த அனைவருக்கும் எத்தனை முறை நன்றி சொன்னாலும் தகும்.

விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் தம்பி பொன். கௌதமசிகாமணி உள்ளிட்ட ஒன்றுபட்ட விழுப்புரம் மாவட்டக் கழக நிர்வாகிகள் அனைவருக்கும் எனது பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**தோல்விகளிலிருந்து பா.ஜ.க. பாடம் கற்க வேண்டும்!**

இதே நேரத்தில் இந்தியா முழுமைக்கும் பல்வேறு மாநிலங்களில் நடைபெற்ற 13 சட்டமன்றத் தொகுதிகளுக்கான இடைத் தேர்தலில் இந்தியா கூட்டணிக் கட்சிகள் 11 இடங்களில் முன்னணியில் இருக்கிறது. பாஜக தோல்வியைத் தழுவி இருக்கிறது. நாடாளுமன்றத் தேர்தலில் ஆட்சி அமைக்கும் பெரும்பான்மையைப் பெறாத கட்சி தான் பா.ஜ.க. இறங்கி வந்து சில கட்சிகளின் தயவால் ஒன்றியத்தில் ஆட்சி அமைத்துள்ளது பா.ஜ.க. அத்தகைய தோல்வி முகமே பா.ஜ.க.வுக்கு இந்த இடைத்தேர்தலிலும் தொடர்கிறது. தோல்விகளில் இருந்து பா.ஜ.க. பாடம் கற்றுக் கொள்ளவேண்டும். மாநில உணர்வுகளை மதிக்காமல் ஆட்சியையும் கட்சியையும் நடத்த முடியாது என்பதை பா.ஜ.க. இனியாவது உணர வேண்டும்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை 2019 ஆம் ஆண்டு முதல் தி.மு.க. தலைமையிலான இந்தியா கூட்டணியின் வெற்றி தொடர்கிறது.

தி.மு.க. கழக வரலாற்றின் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்க வெற்றியாக விக்கிரவாண்டி இடைத்தேர்தல் வெற்றியும் அமைந்துள்ளது. இந்த வெற்றியானது எங்களுக்கு மாபெரும் உற்சாகத்தையும், எழுச்சியையும், அதேசமயத்தில் கூடுதல் பொறுப்பையும் கொடுத்திருக்கிறது.

**கழக அரசின் சாதனைகளுக்கு மகுடம் சூட்டும் வெற்றி!**

நாள்தோறும் நல்ல பல திட்டங்கள் என சாதனைகள் செய்து வரும் நமது கழக அரசின் சாதனைகளுக்கு மகுடம் சூட்டுவதாக, சாதனை வெற்றியாக இது அமைந்துள்ளது.

நாங்கள் எங்களது சாதனைப் பயணத்தையும் வெற்றிப் பயணத்தையும் தொடர்கிறோம்.

மக்களோடு இருக்கிறோம்.

மக்கள் எங்களோடு இருக்கிறார்கள்.

இவ்வாறு அவ்வறிக்கையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

**மொத்த வாக்கு விபரம்**

| | |
|---|---|
| அன்னியூர் சிவா (தி.மு.க.) | 1,24,053 |
| சி.அன்புமணி (பா.ம.க.) | 56,296 |
| அபிநயா (நா.த.க.) | 10,602 |

கழக வேட்பாளர் அன்னியூர் சிவா 67,757 வாக்குகள் வித்தியாசத்தில் அமோக வெற்றி பெற்றார்.

# கழகம் மகத்தான வெற்றி!

முதல் பக்கத் தொடர்ச்சி

**2வது சுற்று!**
அன்னியூர் சிவா (தி.மு.க.) 12002
அன்புமணி (பா.ம.க.) 5904
அபிநயா (நா.த.க.) 849

**3வது சுற்று!**
அன்னியூர் சிவா (தி.மு.க.) 18057
அன்புமணி (பா.ம.க.) 7323
அபிநயா (நா.த.க.) 1383

**4வது சுற்று!**
அன்னியூர் சிவா (தி.மு.க.) 24171
அன்புமணி (பா.ம.க.) 8825
அபிநயா (நா.த.க.) 1763

**5வது சுற்று!**
அன்னியூர் சிவா (தி.மு.க.) 31151
அன்புமணி (பா.ம.க.) 11483
அபிநயா (நா.த.க.) 2275

**6வது சுற்று!**
அன்னியூர் சிவா (தி.மு.க.) 38554
அன்புமணி (பா.ம.க.) 13656
அபிநயா (நா.த.க.) 3178

**7வது சுற்று!**
அன்னியூர் சிவா (தி.மு.க.) 44780
அன்புமணி (பா.ம.க.) 17359
அபிநயா (நா.த.க.) 3556

**8வது சுற்று!**
அன்னியூர் சிவா (தி.மு.க.) 51567
அன்புமணி (பா.ம.க.) 19812
அபிநயா (நா.த.க.) 4187

**9வது சுற்று!**
அன்னியூர் சிவா (தி.மு.க.) 57483
அன்புமணி (பா.ம.க.) 24130
அபிநயா (நா.த.க.) 4704

**10வது சுற்று!**
அன்னியூர் சிவா (தி.மு.க.) 63205
அன்புமணி (பா.ம.க.) 27845
அபிநயா (நா.த.க.) 5265

**11வது சுற்று!**
அன்னியூர் சிவா (தி.மு.க.) 69856
அன்புமணி (பா.ம.க.) 30421
அபிநயா (நா.த.க.) 5918

**12வது சுற்று!**
அன்னியூர் சிவா (தி.மு.க.) 76693
அன்புமணி (பா.ம.க.) 33053
அபிநயா (நா.த.க.) 6422

**13வது சுற்று!**
அன்னியூர் சிவா (தி.மு.க.) 83431
அன்புமணி (பா.ம.க.) 36241
அபிநயா (நா.த.க.) 6814

**14வது சுற்று!**
அன்னியூர் சிவா (தி.மு.க.) 88977
அன்புமணி (பா.ம.க.) 38975
அபிநயா (நா.த.க.) 7275

**15வது சுற்று!**
அன்னியூர் சிவா (தி.மு.க.) 94992
அன்புமணி (பா.ம.க.) 43167
அபிநயா (நா.த.க.) 7699

**16வது சுற்று!**
அன்னியூர் சிவா (தி.மு.க.) 100177
அன்புமணி (பா.ம.க.) 45768
அபிநயா (நா.த.க.) 8226

**17வது சுற்று!**
அன்னியூர் சிவா (தி.மு.க.) 106908
அன்புமணி (பா.ம.க.) 48123
அபிநயா (நா.த.க.) 9094

**18வது சுற்று!**
அன்னியூர் சிவா (தி.மு.க.) 113671
அன்புமணி (பா.ம.க.) 50454
அபிநயா (நா.த.க.) 9740

**19வது சுற்று!**
அன்னியூர் சிவா (தி.மு.க.) 118637
அன்புமணி (பா.ம.க.) 53438
அபிநயா (நா.த.க.) 10130

**20வது சுற்று!**
அன்னியூர் சிவா (தி.மு.க.) 123195
அன்புமணி (பா.ம.க.) 56026
அபிநயா (நா.த.க.) 10479

### விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் கழகம் வெற்றி!

# தி.மு.க. அரசின் செயல்பாடுகளுக்குக் கிடைத்த மகத்தான தீர்ப்பு!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி வாழ்த்து!

*சென்னை, ஜூலை 14-*

*விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தலில் கழகம் வெற்றி பெற்றதையடுத்து, வாழ்த்துத் தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ள திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள், “தி.மு.க. அரசின் செயல்பாடுகளுக்குக் கிடைத்த மகத்தான தீர்ப்பு இது!” என்று பாராட்டியுள்ளார்.*

*அவரது அறிக்கை வருமாறு:-*

*விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க. வேட்பாளர் அன்னியூர் சிவா அவர்கள் பெருவெற்றி பெற்றுள்ளார். ஜாதியை முதலீடாக்கிக் கொண்டவர்களுக்கும், அவர்களுக்குப் பின்னால் ஓங்கிக் குரல் கொடுத்த காவி அணிகளுக்கும், இது போன்ற தோல்வியை சந்திக்க வேண்டிவரும் என்பதை உணர்ந்து, களத்திற்கு வருவதற்கே அஞ்சி ஒதுங்கியவர்களுக்கும், அடாவடித்தன அரசியல் நடத்தும் கட்சித் தலைவருக்கும் படுதோல்வியைத் தந்த*



*விக்கிரவாண்டி தொகுதி வாக்காளர்களைப் பாராட்டுகிறோம்!*

*நாற்பதுக்கு நாற்பது என்ற நாடாளுமன்றப் பொதுத் தேர்தலின் வெற்றிக்கான போனஸ் போல் நடைபெற்ற விக்கிரவாண்டி இடைத்தேர்தலிலும் வெற்றிக் கனிப் பறிக்க வியூகம் வகுத்து, களமாட வைத்த நம் ‘திராவிட மாடல்’ நாயகரான முதலமைச்சருக்கும், அதற்காகக் கடுமையாக உழைத்த இந்தியா கூட்டணிப் பொறுப்பாளர்களுக்கும் நமது நெஞ்சம் நிறைந்த பாராட்டுகள், வாழ்த்துகள்!*

*ஜாதி, மத வெறிக்குக் கிடைத்த மரண அடிதான் இது!*

*தி.மு.க. அரசின் செயல்பாடுகளுக்குக் கிடைத்த மக்கள் தீர்ப்பு - விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தல் வெற்றி!*

*இவ்வாறு அவ்வறிக்கையில் கி.வீரமணி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.*

*மேலும் விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் தி.மு.க. வெற்றி பெற்ற நிலையில், கோவையிலிருந்து திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள், அலைப்பேசி வழியாக, முதலமைச்சர் அவர்களைத் தொடர்பு கொண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார். வெற்றிகள் தொடரவேண்டும் என்ற தமது விருப்பத்தையும் வெளிப்படுத்தினார்.*

### தமிழ்நாட்டை வழிநடத்தும் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையின் மீது

# மக்கள் வைத்துள்ள நம்பிக்கையைப் பறைசாற்றும் வெற்றி!

## விக்கிரவாண்டி வெற்றிக்கு வாழ்த்துத் தெரிவித்து - வைகோ எம்.பி. அறிக்கை !

*சென்னை, ஜூலை 14-*

*விக்கிரவாண்டி தொகுதி வெற்றிக்கு வாழ்த்துத் தெரிவித்து ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ எம்.பி. விடுத்துள்ள அறிக்கையில், “தமிழ்நாட்டை வழிநடத்தும் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையின் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையைப் பறை சாற்றும் வெற்றி இது!” என்று குறிப்பிட்டுள்ளார்.*

*அவரது அறிக்கை வருமாறு:-*

*விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதிக்கு நடைபெற்ற இடைத் தேர்தலில் தி.மு.க. வேட்பாளர் அன்னியூர் சிவா பல்லாயிரக்கணக்கான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருக்கிறார். நாடாளுமன்றத் தேர்தலில் நூற்றுக்கு நூறு வெற்றியை ஈட்டி தி.மு.க. தலைமையிலான இந்தியா கூட்டணி சரித்திரம் படைத்தது.*



*தி.மு.க. அரசின் மீது முன் வைக்கப்பட்ட வன்மம் கலந்த அவதூறுகள் பொடிப் பொடியாக்கப்பட்டு, தற்போது விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத்தேர்தலிலும் தி.மு.க. வேட்பாளர் மகத்தான வெற்றி பெற்று இருக்கிறார்.*

*இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக தமிழ்நாட்டை வழி நடத்தி வரும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையின் மீது தமிழக மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை தொடர் வெற்றிகள் பறைசாற்றுகிறது.*

*விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு நன்றி தெரிவிப்பதுடன், வெற்றி பெற்ற தி.மு.க. வேட்பாளர் அன்னியூர் சிவா மற்றும் தேர்தல் களத்தில் வெற்றிக் கனியை பறிக்க உழைத்த தி.மு.க. கூட்டணி தோழர்களுக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.*

*இவ்வாறு தனது அறிக்கையில் வைகோ எம்.பி. குறிப்பிட்டுள்ளார்.*

### முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு வாழ்த்து - பாராட்டு!

# விக்கிரவாண்டி மக்கள் பா.ம.க.வுக்கு சரியான பாடம் புகட்டியுள்ளனர்!

## காங்கிரஸ் கட்சி மாநிலத் தலைவர் கு.செல்வப்பெருந்தகை அறிக்கை!

*சென்னை, ஜூலை 14 -*

*காங்கிரஸ் கட்சி மாநிலத் தலைவர் கு.செல்வப்பெருந்தகை விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தலில் தி.மு.க. வேட்பாளர் அன்னியூர் சிவா அவர்கள் 67, 169 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருக்கிறார். எதிர்த்து போட்டியிட்ட பா.ஜ.க. ஆதரவு பெற்ற பா.ம.க. மற்றும் நாம் தமிழர் கட்சி வேட்பாளர்கள் படுதோல்வி அடைந்திருக்கிறார்கள். சமூகநீதி கொள்கையை அடகு*



*வைத்து பா.ஜ.க.வோடு கூட்டணி அமைத்து போட்டியிட்ட பா.ம.க. படுதோல்வி அடைந்திருக்கிறது.*

*விக்கிரவாண்டி மக்கள் பா.ம.க.வுக்கு சரியான பாடத்தை புகட்டியிருக்கிறார்கள். இதன்மூலம் கடந்த மூன்றாண்டுகளுக்கு மேலாக மக்கள் நலன் சார்ந்த பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி நல்லாட்சி நடத்தி வருகிற மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமை மீது நம்பிக்கை வைத்து அமோக வெற்றியை விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி மக்கள் வழங்கியிருக்கிறார்கள். சமீபகாலமாக எதிர்கட்சிகள் பரப்பி வந்த ஆதாரமற்ற அவதூறு குற்றச்சாட்டுகளை பொய்யாக்கி இடைத்தேர்தல் வெற்றியை வழங்கியிருக்கிறார்கள்.*

*கடந்த 2019 மக்களவை தேர்தல், 2021 சட்டமன்றத் தேர்தல், ஊரக, நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்கள், ஈரோடு சட்டமன்ற இடைத் தேர்தல் என அனைத்து தேர்தல்களிலும் தொடர் வெற்றி பெற்று வருகிற தி.மு.க. தலைமையிலான இந்தியா கூட்டணிக்கு மேலும் வலு சேர்க்கிற வகையில் விக்கிரவாண்டி தேர்தல் தீர்ப்பு அமைந்துள்ளது. அதேபோல, பல்வேறு மாநிலங்களில் நடைபெற்ற 13 இடைத் தேர்தல்களில் 11 தொகுதிகளில் தேசிய ஜனநாயக கூட்டணி தோற்கடிக்கப்பட்டு இந்தியா கூட்டணி வெற்றி பெற்றிருக்கி றது.*

*இதன்மூலம் கடந்த மக்களவை தேர்தலில் பா.ஜ.க.வுக்கு மக்கள் பாடம் புகட்டியதைப் போல இடைத் தேர்தலிலும் மக்கள் நிராகரித்திருக்கிறார்கள். பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு மக்களின் நம்பிக்கையை இழந்து விட்டதை இடைத் தேர்தல் தோல்விகள் உறுதி செய்கின்றன. தலைவர் ராகுல்காந்தி மேற்கொண்ட தேசிய ஜனநாயக கூட்டணி எதிர்ப்பு பிரச்சாரத்திற்கு மக்கள் ஆதரவு அளித்து இந்தியா கூட்டணியை வெற்றி பெறச் செய்திருக்கிறார்கள்.*

*இனி வருகிற காலங்களில் தமிழகத்திலும், தேசிய அளவிலும் இந்தியா கூட்டணிக்கு ஒளிமயமான எதிர்காலம் இருப்பதை இடைத்தேர்தல் முடிவுகள் உறுதி செய்துள்ளன.*

*விக்கிரவாண்டி இடைத் தேர்தலில் தி.மு.க.வின் வெற்றிக்காக வாக்களித்த வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிப்பதோடு, தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*